**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**C.C.No. 87/2018**

2026ம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.சேதுபதி என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சேதுபதி | வயது | : | 74/26 |
| த.பெ/ க.பெ. | : | வீராச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | வாழைக்குறிச்சி | நிலை | : | LW 03 / PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

**முதல்விசாரணை:**

நான் தற்போது வாழைக்குறிச்சியில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். வடிவேலுவைத் தெரியும். அவர் எனது எதிர்வீட்டுக்காரர். அ.சா.1ஐ தெரியும். நான் ஆடு ஓட்டிக்கொண்டு 2018ம் வருடம் ஒரு நாள் மாலை 05.00 மணிக்கு மேல் வீட்டிற்கு வந்தபோது, சத்தம் கேட்டு போய் பார்த்தபோது, கோவிந்தம்மாள் படுத்திந்தார். அவரை ராஜேந்திரனும் நாங்களும் சேர்ந்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.

ஆஜர் எதிரி என் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் ஆவார். போலீசார் விசாரணையில், கடந்த 06.01.2018ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில், வெளியே சத்தம் கேட்டு, நான் என் வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தபோது, கோவிந்தம்மாளை பக்கத்து வீட்டிலுள்ள வடிவேல் மானநஷ்டமாக பேசிக்கொண்டிருந்ததாகவும், வடிவேலு கோவிந்தம்மாளை பிடித்து கீழே தள்ளி உருட்டுக்கட்டையால் தலையில்அடித்து இரத்தக் காயத்தை ஏற்படுத்தியதாகவும், நான் ஓடிப்போய் வடிவேலுவை தடுத்து, விலக்கி விட்டேன் என்றும், கோவிந்தம்மாளின் கணவரும் நானும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த சுதாவும் கோவிந்தமாளை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரி தனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் வழக்கு சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை

மறு விசாரணை– இல்லை

/ உண்மை நகல்/
ஒம்/–P.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்1,
ஜெயங்கொண்டம்.